சுருக்கம்

பாசனம் – அத்திக்கடவு – அவினாசி வெள்ளநீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு நில அளவை மற்றும் மட்ட அளவை தயாரிக்கும் பணி – ரூ.30.00 இலட்சத்தில் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி(க்யூ1) துறை

அரசாணை (நிலை) எண்:218

நாள்: 1 .11 .2011.
ஐப்பசி 15,
திருவள்ளுவர் ஆண்டு 2042.

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (வாலாயம்) எண் 319, பொதுப்பணி (க்யூ1) துறை, நாள் 16.06.2009.
2. அரசு கடித (நிலை) எண் 296, பொதுப்பணி (க்யூ1) துறை, நாள் 14.12.2009.

மீளவும் படிக்கப்பட்டது:

3. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, அவர்களின் கடிதம் எண். எஸ்.7(1)/68809/2003 நாள் 8.02.2011.

-----

ஆணை:

அத்திக்கடவு – அவினாசி வெள்ள நீர் கால்வாய் அமைக்கும் திட்டத்தில் பவானி ஆற்றில் உள்ள வெள்ள உபரி நீரை காரமடை, அன்னூர், அவினாசி, புளியம்பட்டி, பல்லடம் மற்றும் பெருந்துறை ஆகிய பகுதிகளுக்கு திருப்பி, அதன் மூலம் 48 குளங்களையும் 213 குட்டைகளையும் நிரப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் குறித்து ஆய்வு செய்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்க மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், அரசு ஆலோசகர் (நீர்வள ஆதாரம்) மற்றும் தலைவர் காவிரி தொழில்நுட்பக்குழு திரு. ஏ. மோகனகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் தொழில் நுட்ப பரிந்துரையின் அடிப்படையில் இத்திட்டத்தினை விரிவான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஆணையின்படி, பில்லூர் அணையிலிருந்து ஒரு உயர்மட்ட கால்வாய் அமைத்து அதன் மூலம் காரமடை, அன்னூர், அவினாசி, புளியம்பட்டி, பல்லடம் மற்றும் பெருந்துறை ஆகிய பகுதிகளில் உள்ள குளங்கள் மற்றும் குட்டைகளுக்கு நீர் வழங்க, களப்பணிகள் துவங்கப்பட்டுள்ளது.

2. மேற்கூறிய திட்ட ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள ரூ.30.00 இலட்சத்திற்கான பின்வரும் மதிப்பீட்டினை அனுப்பி அரசின் நிர்வாக ஒப்புதலை பெற்றுத் தருமாறு நீர்வள ஆதாரத்

…2 ..

துறை, திட்ட உருவாக்கத் தலைமைப் பொறியாளர் கோரியுள்ளதாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை அவர்கள் குறிப்பிட்டுள்ளார் :–

| | இனங்கள் | | மதிப்பு (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | சுரங்கப்பாதை அமையவிருக்கும் பகுதிகளுக்கு மற்றும் ஓடை கடக்கும் பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் போடுதல் | = | 20,31,000 |
| 2. | மண் பரிசோதனை செய்தல் மற்றும் சோதனைக் குழிகள் (Trial Pits) தோண்டுதல் | = | 2,92,000 |
| 3. | எல்லைக் கற்கள் மற்றும் மூங்கில், கயிறு, கொடிகள் போன்றவை | = | 3,30,000 |
| 4. | புகைப்பட செலவினங்கள் | = | 30,000 |
| 5. | மதிப்பீட்டுச் செலவினங்கள் | = | 1,00,000 |
| 6. | பணியாட்கள் மற்றும் வாகன ஒட்டுநர் நியமித்தல் | = | 1,67,490 |
| 7. | இதர செலவினங்கள் | = | 49,510 |
| | **மொத்தம்** | = | 30,00,000 |

3. மேலே பத்தி 2 இல் உள்ள முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, அவர்களின் கருத்துருவை கவனமாக பரிசீலித்த பின் அவரின் கருத்துருவினை ஏற்று அத்திக்கடவு–அவினாசி வெள்ளநீர் கால்வாய் அமைக்கும் திட்டத்தில், நில அளவை மற்றும் மட்ட அளவுகள் எடுக்கும் பணிக்கு ரூ.30.00 இலட்சத்திற்கு (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு இதன் மூலம் ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3 இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையானது கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

> “2701 பெரிய மற்றும் நடுத்தர பாசனம் – 80 பொது 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II– மாநில திட்டம் – JI பாசன ஏற்பாடுகளை ஆய்வு செய்தல் – நில அளவை செய்து நிலத்தை சமன்படுத்துதல் 17 சிறுபணிகள்”
> (துதொகு 2701–80–001–JI–1700).

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு “புதுப்பணி“ (New Service) குறித்த செலவினமாகும். இதற்கான சட்டப்பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது–I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையுடன் நிதி (வ.செ.பொது–I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, பொதுப்பணித்துறை, சென்னை–5 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2011–12 ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கையில் (Supplementary

…3 ..

Estimate) சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதி (வ.செ.பொது–I/பொ.ப–II) துறைக்கு அனுப்புமாறு முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, பொதுப்பணித்துறை கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ. சா. எண்.51233 / பொ.ப-II / 1, நாள் 21.10.2011 இன் வழி ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 654 (அறுநூற்று ஐம்பத்து நான்கு)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**எம். சாய் குமார்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
அரசு ஆலோசகர் (நீர்வள ஆதாரம்), 406, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை– 8.
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை– 5.
தலைமைப் பொறியாளர், ,திட்ட உருவாக்கம், நீர்வள ஆதாரத் துறை, சென்னை– 5.
தலைமைப் பொறியாளர், கோயம்புத்தூர் மண்டலம், நீர்வள ஆதாரத் துறை, கோயம்புத்தூர்–1.
மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர்.
கருவூல அலுவலர், கோயம்புத்தூர்.

நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (பொதுப் பணி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
பொதுப்பணி (டபிள்யூ) பிரிவு, சென்னை–9.
நிதி (பொ.ப–2 / வ.செ.பொது I (மற்றும்) II) துறை, சென்னை–9.
இகோ / உந.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**